வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,100,26,12,000/–, மூலதனக் கணக்கில் ரூ.799,48,02,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் 4–5–2022 (புதன்கிழமை), காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

71. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்காக அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில உணவுப் பொருட்களை கட்டணம் செலுத்துவதன் பேரில் முகவரமைப்பாக செயல்பட்டு கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை நியமனம் செய்வது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 3(3)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 16.12.2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 449–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

72. கரூர், திருச்சிரப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பு கால்வாய் திட்டத்திற்கான சமூகதாக்க மதிப்பீடு உள்ளிட்ட விரைவு சூழலியல் தாக்க மதிப்பீட்டாய்வினை மேற்கொள்ளும் பணியை, நியமன அடிப்படையில் சென்னையிலுள்ள திருவாளர்கள் வாட்டர் அண்ட் பவர் கன்சல்டண்சி சர்வீசஸ் லிமிடெட் (WAPCOS) நிறுவனத்திடம் ஒப்படைப்பது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 16.12.2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 450–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

73. பசுமை காலநிலை நிதியின்கீழ் பாதிக்கப்படக்கூடிய சமுதாயத்தின் காலநிலையை மீட்டுருவாக்கம் செய்வதற்கு நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கான கருத்துருவைத் தயாரிக்கும் பணியை நேமக அடிப்படையில் திருவாளர்கள் NABCONS நிறுவனத்தின் சேவைகளைப் பயன்படுத்துவது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 16.6.2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 143–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

74. பெரியார்–வைகை சிறிய நீர் மின் திட்டங்களில் எஞ்சியுள்ள பணிகளை செயல்படுத்துவதற்கான ஆலோசனை உதவிக்கு வகை செய்வதற்கான பணியை நேமக அடிப்படையில், உத்தராகண்ட்/ரூர்க்கியிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் நீர் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறைக்கு வழங்குவது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 2.11.2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 245–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2022 ஏப்ரல் 29]

75. "தமிழ்நாடு மாநிலத்தில் கல் உடைக்கும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் தூசு உமிழ்வுகளையும் தொலைவு அளவுகோலையும் மதிப்பீடு செய்யும்" பணியை, சென்னையிலுள்ள தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (NEERI) வழங்குவது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)-ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 2.11.2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 246-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

76. கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தைச் (AIIRLIVAS) செயல்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை ஆலோசனைச் சேவைகளுக்கு, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஆலோசனைப் பணிகளை (NABCONS) ஈடுபடுத்துவது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)-ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 2.11.2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 247-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

77. "தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இணைய அடிப்படையிலான புவிசார் சேவைகள் (GSS) வலைமுகப்பு" உருவாக்குவதற்கான பணியை, அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு நிறுவனத்திற்கு வழங்குவது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)-ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 2.11.2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 248-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

78. தமிழ்நாட்டிற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை (CZMP) வரைபடங்களுடன் தயாரிப்பதற்கான பணிகளை தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையம் (NCSCM) மேற்கொள்வது குறித்து 1998 ஆம் ஆண்டு

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 20.12.2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 276–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

79. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரால் விதைகளின் இருப்புத்தன்மையைப் பொறுத்து துறைசார்ந்த பண்ணைகள்/வேளாண் அறிவியல் மையங்கள் (Krishi Vigyan Kendras)/தமிழ்நாடு கால்நடை மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய விதை கழகத்திடமிருந்து சாகுபடி செய்த/உற்பத்தி செய்த விதைகளை தேவையான அளவு நேரடியாக கொள்முதல் செய்வது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 13.7.2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 167–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

80. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திலிருந்து (ஆவின்) 2022 ஆம் ஆண்டு பொங்கல் பரிசுத் தொகுப்பிற்காக 2,15,48,060 எண்ணிக்கையிலான 100 கிராம் நெய் புட்டிகளை கொள்முதல் செய்வது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 13.1.2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 16–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

81. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஐம்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2022 ஏப்ரல் 29]

82. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை மற்றும் 2020–2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

83. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) மற்றும் 40(7) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

84. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஐம்பதாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

85. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஐம்பதாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

152. மானியக் கோரிக்கை எண் 19-மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

153. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

154. கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2022–2023. (தமிழ்)